**ஆசிரியர் தேர்வு வாரியம், சென்னை–6.**

**பத்திரிக்கைச் செய்தி**

ஆசிரியர் தேர்வு வாரியம் 16.06.2017 அன்று வெளியிட்ட விளம்பரம்/ அறிவிக்கை எண்.04/2017–ல் 2017–18ம் ஆண்டிற்கான பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில் உள்ள 1058 காலிப் பணியிடங்களுக்கு நேரடி நியமனம் மூலம் பணித்தெரிவிற்கு தகுதியான பணிநாடுநர்களிடமிருந்து 17.06.2017 முதல் 07.07.2017 வரை இணையதளம் மூலம் விண்ணப்பிக்க அறிவுறுத்தப்பட்டது. அதன்படி 1,34,982 பணிநாடுநர்கள் விண்ணப்பித்திருந்தனர். விளம்பரம்/அறிவிக்கையில் குறிப்பிட்டிருந்த கல்வித் தகுதியினை எதிர்த்து சில பணிநாடுநர்கள் உயர்நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கு எண்.WP.Nos.17201 to 17203/2017–ல் அரசாணை நிலை எண்.111 உயர்கல்வித் துறை நாள் 25.05.2010ன்படி கல்வித்தகுதியை திருத்தி அறிவிக்கை வெளியிட தீர்ப்பு வழங்கப்பட்டது. மேற்காண் வழக்கில், சென்னை உயர்நீதிமன்றம் பிறப்பித்த தீர்ப்பு ஆணை 27.07.2017 அன்று பெறப்பட்டது. அதில் வழங்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில், ஏற்கனவே வெளியிடப்பட்ட அரசு பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில் (Government Polytechnic Colleges) காலியாக உள்ள 1058 விரிவுரையாளர் (பொறியியல் மற்றும் பொறியியல் அல்லாத பாடங்கள்) பணியிடங்களுக்கான விளம்பரம்/அறிவிக்கை எண்.04/2017 நாள் 16.06.2017 ரத்து செய்யப்பட்டு , புதிய அறிவிக்கை எண்.06/2017 நாள் 28.07.2017 ஆசிரியர் தேர்வு வாரிய இணையதளத்தில் (www.trb.tn.nic.in) வெளியிடப்பட்டுள்ளது.

இணையதளம் மூலம் 29.07.2017 முதல் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பிக்க கடைசி நாள் 11.08.2017 ஆகும். ஏற்கனவே விளம்பரம்/அறிவிக்கை எண்.04/2017ன்படி இணையதளம் மூலம் விண்ணப்பம் பதிவு செய்தவர்கள் தற்போது புதிதாக விண்ணப்பிக்கத் தேவையில்லை. அவர்கள் ஏற்கனவே பதிவு செய்த விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும். இவ்வறிவிக்கையின்படி எழுத்துத்தேர்வு 16.09.2017 அன்று நடைபெற உள்ளது .

தலைவர்